**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ஆம் நாள் சனிக்கிழமை

**இ.ம.எண்.07/2025 மற்றும் இ.ம.எண்.08/2025**

in

**அசல் வழக்கு எண்.25/2017**

வசந்தி ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சரவணன்
2. முத்துச்செல்வி ....எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இம்மனுக்களானது 02.02.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.மாரியப்பன் அவர்கள் ஆஜராகியும், 1வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 2வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.புஷ்பராஜ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுக்களுக்கு No Counter allowed on terms என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனுக்கள், 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**பொதுவான உத்தரவு**

மனுதாரரால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 மற்றும் கட்டளை 18 விதி 17 ஆகியவற்றின் கீழ், மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்ய 20.11.2025 போடப்பட்டுள்ள வாய்தாவை மாற்றி வழக்கை ரீ–ஓப்பன் செய்து,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.07 17:23:07 +0530

வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ஐ மீண்டும் ரீ–கால் செய்து கூடுதல் வழக்கு நிரூபண அபிடவிட் தாக்கல் செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.07/2025 மற்றும் 08/2025–ன் மனுக்களின் சுருக்கம்:–**

மனுதார் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தபசில் கண்ட சொத்துக்களை பொறுத்து மனுதாரருக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டதென விளம்புகை பரிகாரமும், அதனை தொடர்ந்து 1ம் பிரதிவாதி அத்துமீறி கட்டிய கட்டுமானங்களை இடித்து அப்புறப்படுத்தி போகவும் வலியுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நிலையில் இவ்வழக்கில் மனுதாரர்/வாதியின் வழக்கில் கடந்த 23.04.2019ம் தேதியில் மனுதாரர் தரப்பில் முதல்நிலை சாட்சியம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், மனுதாரரை எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய 18.09.2019ம் தேதியில் வாய்தா போடப்பட்டுள்ள நேரத்தில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஒரு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையில் 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 14.07.2017ம் தேதியில் பிராது சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்துவிட்டதாகவும் ஆதலால் இவ்வழக்கிற்கு 2ம் எதிர்மனுதாரர் அவசியக்கட்சி என்று கூறிய பிறகு எதிர்மனுதாரர்களின் மோசடி செயல் மனுதாரருக்கு தெரியவந்து 2ம் எதிர்மனுதாரரை வழக்கில் கட்சி சேர்க்க 15.12.2021ம் தேதியில் மனு செய்து மேற்படி மனு இந்நீதிமன்றத்தால் அனுமதி ஆகி பிராதை சீர்திருத்தம் செய்ய 2ம் எதிர்மனுதாரர் 2ம் பிரதிவாதியாக வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டார் என்றும், இந்நிலையில் மனுதாரர் தரப்பில் முதல்நிலை சாட்சியம் முடிந்தபிறகு மனுதாரரை குறுக்கு விசாரணை செய்தபிறகு 2ம் எதிர்மனுதாரரை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் நேரத்தில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் போடப்பட்ட எதிர்வழக்குரைக்கு மனுதாரர் தரப்பில் ரிப்ளை ஸ்டேட்மெண்ட் போடத்தவறிவிட்டதால் மனுதார் தரப்பில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.07 17:23:14 +0530

இந்நீதிமன்றத்தில் ரிப்ளை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்ய போடப்பட்ட மனுவில் மனுதாரரின் மனு இந்நீதிமன்றத்தில் கடந்த 16.10.2025ம் தேதியில் மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகை கட்ட வேண்டும் என்றபேரில் அனுமதி ஆனது என்றும், அதன்படி மனுதாரரும் இந்நீதிமன்ற உத்தரவின்படி செலவுத்தொகையை கட்டிவிட்டதாகவும், அதன்பிறகு 2ம் எதிர்மனுதாரரை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய 20.11.2025ல் வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் தரப்பில் கூடுதல் வழக்கு நிரூபண அவிடவிட்டு தாக்கல் செய்ய மனுதாரருக்கு வாய்ப்பளிக்க வேண்டியது அவசியமானது என்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும், மேலும், மேற்படி வழக்கில் ஒரு இறுதியான தீர்வை எட்டமுடியும் என்றும், ஆகையால், மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்ய 20.11.2025 போடப்பட்டுள்ள வாய்தாவை மாற்றி வழக்கை ரீ–ஓப்பன் செய்து, வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ஐ மீண்டும் ரீ–கால் செய்து கூடுதல் வழக்கு நிரூபண அபிடவிட் தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி இம்மனுக்கள் மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2) **இ.ம.எண்.8/2025ல் 2வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 07/2025–ல் 2வது எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–**

மனுதாரரின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர் பிரஸ்தாபித்துள்ள வழக்குரை தபசில் சொத்தும் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து 2ம் எதிர்மனுதாரர் கடந்த 14.07.2017ம் தேதியில் கிரையம் பெற்ற சொத்தும் வேறு வேறு சொத்துக்கள் என்றும், 2ம் எதிர்மனுதாரர் மேற்படி வாதியின் வழக்குரைக்கு தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலேயே தபசில் சொத்தும் 2ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சொத்தும் வேறு வேறு என குறிப்பிட்டு எதிர்வழக்குரை தபசில் சொத்தினை குறிப்பிட்டே எதிர்உரை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரை தபசில் சொத்து தொடர்பாக 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.07 17:23:21 +0530

குறுக்கு விசாரணை முடிவுற்ற நிலையில், இந்த மனுதாரர் 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேலும் மனுதாரர் அவரது பிராதில் கூறியுள்ளபடி 2ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்றுள்ள சொத்தானது வழக்குரை தபசில் சொத்து அல்ல என்பதாலும், 2ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்றுள்ள சொத்தானது வழக்குரை தபசில் சொத்தை பொறுத்து எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யப்படாத சொத்து என்பதால் மனுதாரர் தரப்பில் கூடுதல் வழக்கு நிரூபண அபிடவிட்டு தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும், அதனால் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரீ–ஓபன், ரீ–கால் மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்றும், எனவே, இம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) அசல் வழக்கானது விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் வலியுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரால் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

7) இம்மனுவின் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் பிரஸ்தாபித்துள்ள வழக்குரை தபசில் சொத்தும் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து 2ம் எதிர்மனுதாரர் கடந்த 14.07.2017ம் தேதியில் கிரையம் பெற்ற சொத்தும்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.07 17:23:28 +0530

வேறு வேறு சொத்துக்கள் என்றும், 2ம் எதிர்மனுதாரர் மேற்படி வாதியின் வழக்குரைக்கு தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலேயே தபசில் சொத்தும் 2ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சொத்தும் வேறு வேறு என குறிப்பிட்டு எதிர்வழக்குரை தபசில் சொத்தினை குறிப்பிட்டே எதிர்உரை தாக்கல் செய்துள்ளார் என்றும், 2ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்றுள்ள சொத்தானது வழக்குரை தபசில் சொத்தை பொறுத்து எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யப்படாத சொத்து என்பதால் மனுதாரர் தரப்பில் கூடுதல் வழக்கு நிரூபண அபிடவிட்டு தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை என இம்மனுவுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) அசல் வழக்குகோப்பின் பரிசீலனையில் இருந்து, 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் போடப்பட்ட எதிர்வழக்குரைக்கு மனுதாரர் தரப்பில் ரிப்ளை ஸ்டேட்மெண்ட் போடத்தவறிவிட்டதால் மனுதார் தரப்பில் இந்நீதிமன்றத்தில் ரிப்ளை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்ய அனுமதிகோரிதாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.6/2025 இந்நீதிமன்றத்தால் நிபந்தனை செலவுத்தொகையுடன் கடந்த 16.10.2025ம் தேதியில் அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிப்ளை ஸ்டேட்மெண்ட் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

9) இந்நிலையில், மனுதாரர் தரப்பில் ரிப்ளை ஸ்டேட்மெண்ட்டில் உள்ள தங்களது தரப்பு கட்சியை நிரூபணம் செய்ய வழக்கை ரீ–ஓப்பன் செய்து, வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ஐ மீண்டும் ரீ–கால் செய்து கூடுதல் வழக்கு நிரூபண அபிடவிட் தாக்கல் செய்ய மனுதாரருக்கு வாய்ப்பளிக்க வேண்டியது அவசியமானது ஆகும்.

10) மேலும், அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கும் தரப்பினர்கள் இடையே உள்ள பிரச்சனையை முழுமையாக தீர்வு காண்பதற்கும், அசல் வழக்கை மறுதிறவு செய்து, வா.சா.1–ஐ கூடுதல்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.02.07 17:23:34 +0530

வழக்கு நிரூபண அபிடவிட்டு தாக்கல் செய்ய திரும்ப அழைத்து அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சரியானது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் "No Counter allowed on terms" என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

11) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**12) இறுதியாக**

**இ.ம.எண்.07/2025**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 2ம் எதிர்மனுதாரருக்கு நேரடியாக 16.02.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 16.02.2026.

**இ.ம.எண்.08/2025**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 2ம் எதிர்மனுதாரருக்கு நேரடியாக 16.02.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 16.02.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.07 17:23:41 +0530

செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.07 17:23:48 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :– – இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.07 17:23:54 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**
I.A.No.07/2025 and
I.A.No.08/2025
in
O.S.No.25/2017

**உத்தரவு (Draft / Fair)**

**நாள் : 07.02.2026**